www.surabooks.com

சுராவின்

CBSE

# தமிழ் உரைநூல்

வகுப்பு

6

புதிய வினாத்தாள் அடிப்படையில்
தயாரிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள்**

- செய்யுள், உரைநடை விளக்க மனவரைபடங்கள்
- செய்யுள் வரிவினா விடைகள்
- செய்யுள், உரைநடை எளிமையான வினாக்கள் மற்றும் விடைகள்
- இலக்கண விளக்கம் – அறிந்து கொள்க, நினைவில் கொள்க.
- CBSE வினாத்தாள் அடிப்படையில் சான்று தருக, நிரப்புக, இலக்கணக்குறிப்பு எழுதுக, கூறியவாறு செய்க – பகுதி இலக்கண வினாக்கள் விடைகள்.
- திருக்குறள் சீர்களால் நிரப்புக – வினா விடைகள்
- எளிய நடையில் துணைப்பாட வினாக்கள் விடைகள்
- பொதுப்பத்தி வினாக்கள் – விடைகள் (பலவுள் தெரிக – சுருக்கமான விடையளி மாதிரி)
- காட்சியைக் கண்டு கவினுற எழுதுக – படங்கள் மற்றும் விடைகள்.
- முக்கிய கடிதங்கள் மற்றும் பொதுக்கட்டுரைகள்
- CBSE மாதிரி வினாத்தாள்கள் இரண்டு தரப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 98409 26027
enquiry@surabooks.com
Ph: 8124201000 / 8124301000

© வெளியீட்டாளர்கள்
குறியீட்டு எண் : CB6_01

எழுதி வழங்கியவர்
சு. முத்தமிழ்ப்பிரியா, M.A., M.Ed
திருத்தியவர்
நா.சுந்தர், B.Lit.,

All rights reserved © SURA Publications. No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, digitally, electronically, mechanically, photocopying, recorded or otherwise, without the written permission of the publishers. Strict action will be taken.

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 81242 01000 / 81243 01000
வாட்ஸ்அப் : 81242 01000 / 98409 26027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்

**Head Office**
Sura Publications
1620, 'J' Block, 16th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**E-mail :** orders@surabooks.com
**Website :** www.surabooks.com

**For Orders Contact**
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

24-5-2025

# பதிப்பாசிரியர் உரை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக. – திருவள்ளுவர்**

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி '**சுராவின் CBSE தமிழ் உரைநூல்**' ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** ஆறாம் வகுப்பிற்கான **CBSE தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

CBSE வினாத்தாள் அடிப்படையில் செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப்பாட வினாக்கள் விடைகள், கடிதங்கள் மற்றும் பொதுக்கட்டுரைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் CBSE இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**
**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

## மாணவச் செல்வங்களே...

- ஆர்வமே சிறந்த செயலாக்கத்திற்கான வழி...
- பாடங்களை ஆர்வத்துடன் புரிந்து கொண்டு கதைப் போல் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு செய்யுளையும் அந்நூல், இயற்றியவர் பெயர் அறிந்திருக்க வேண்டும்.
- பாடலின் தொகுப்பு (அல்லது) அதன் தலைப்பு முதலியவற்றை அறிவது அவசியம்.
- செய்யுள் பகுதியில் நூற்குறிப்பு, ஆசிரியர் குறிப்பு, சொல்லும் பொருளும் படித்தல் அவசியம்.
- இலக்கணப் பகுதியில் 'அறிந்து கொள்க' எனும் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தினை படித்துக் கொள்க.
- கட்டுரை வினாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்புகளுக்கான தலைப்பை எழுத வேண்டும். குறிப்புகளைக் கொண்டு குறிப்புச்சட்டகம் அமைத்தல் வேண்டும். முன்னுரை மற்றும் முடிவுரையோடு குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு உட்தலைப்புகள் எழுத வேண்டும்.
- பழமொழிகள், திருக்குறள், மேற்கோள்கள், செய்யுள் வரிகள் போன்றவற்றைப் பயன்படுத்தினால் பொதுக்கட்டுரை சிறப்பாக அமையும்.

**ஆழ்ந்து படியுங்கள் வெற்றி உங்களுக்கே!**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | மொழி **தமிழ்த்தேன்** | இன்பத்தமிழ்* (செய்யுள்) | 1-12 |
| | | வளர்தமிழ் (உரைநடை) | |
| | | ஒளி பிறந்தது (துணைப்பாடம்) | |
| | | தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும் (கற்கண்டு) | |
| 2. | இயற்கை **இயற்கை இன்பம்** | ஏதிலிக்குருவிகள் (உரைநடை) | 13-24 |
| | | சிறகின் ஓசை (உரைநடை) | |
| | | கிழவனும் கடலும் (துணைப்பாடம்) | |
| | | முதலெழுத்தும் சார்பெழுத்தும் (கற்கண்டு) | |
| | | திருக்குறள்* (வாழ்வியல்) | |
| 3. | கல்வி **கண்ணெனத் தகும்** | கல்வியைப் போற்று* (செய்யுள்) | 25-36 |
| | | துன்பத்தை வெல்லும் கல்வி (செய்யுள்) | |
| | | கல்விக்கண் திறந்தவர் (உரைநடை) | |
| | | நூலகம் நோக்கி... (துணைப்பாடம்) | |
| | | மொழிமுதல் எழுத்துகள் (கற்கண்டு) | |
| 4. | நாகரிகம், பண்பாடு **பாடறிந்து ஒழுகுதல்** | ஆசாரக்கோவை (செய்யுள்) | 37-50 |
| | | கண்மணியே கண்ணுறங்கு (செய்யுள்) | |
| | | தமிழர் பெருவிழா (உரைநடை) | |
| | | அறிவுசால் ஔவையார் (துணைப்பாடம்) | |
| | | மொழி இறுதி எழுத்துகள் (கற்கண்டு) | |
| | | திருக்குறள்* (வாழ்வியல்) | |
| 5. | தொழில், வணிகம் **கூடித் தொழில் செய்** | நானிலம் படைத்தவன் (செய்யுள்) | 51-64 |
| | | கடலோடு விளையாடு* (செய்யுள்) | |
| | | வளரும் வணிகம் (உரைநடை) | |
| | | உழைப்பே மூலதனம் (துணைப்பாடம்) | |
| | | இன எழுத்துகள் (கற்கண்டு) | |




enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 6. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் **புதுமைகள் செய்யும் தேசமிது** | பாரதம் அன்றைய நாற்றங்கால்* (செய்யுள்) | 65-78 |
| | | பாஞ்சை வளம் | |
| | | தமிழ்நாட்டில் காந்தி(உரைநடை) | |
| | | வேலுநாச்சியார் (துணைப்பாடம்) | |
| | | சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள் (கற்கண்டு) | |
| 7. | அறம், தத்துவம், சிந்தனை **எல்லாரும் இன்புற** | பராபரக் கண்ணி* (செய்யுள்) | 79-92 |
| | | நிலம் பொது (உரைநடை) | |
| | | பாதம் (துணைப்பாடம்) | |
| | | நால்வகைச் சொற்கள் (கற்கண்டு) | |
| | | திருக்குறள் (வாழ்வியல்) | |
| 8. | மனிதம், ஆளுமை **இன்னுயிர் காப்போம்** | ஆசிய ஜோதி (செய்யுள்) | 93-107 |
| | | இளைய தோழனுக்கு | |
| | | மனிதநேயம் (உரைநடை) | |
| | | முடிவில் ஒரு தொடக்கம் | |
| | | பெயர்ச்சொல் | |
| | | திருக்குறள் (வாழ்வியல்) | |
| படைப்புகளும் ஆசிரியர்களும் | | | 108 |
| பொதுப்பத்தி வினா - விடைகள் (பலவுள் தெரிக – சுருக்கமான விடையளி மாதிரி) | | | 109-124 |
| காட்சியைக் கண்டு கவினுற எழுதுக | | | 125-127 |
| கடிதங்கள் | | | 128-139 |
| பொதுக்கட்டுரைகள் | | | 139-158 |
| CBSE மாதிரி வினாத்தாள்கள் (I & II) | | | 159-170 |




enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'** Kindly prepare your order in your School letterhead and send it to us. For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **36550290536** | Our A/c No. : **21000210001240** |
| Bank Name : **STATE BANK OF INDIA** | Bank Name : **UCO BANK** |
| Bank Branch : Padi | Bank Branch : Anna Nagar West |
| IFSC : SBIN0005083 | IFSC : UCBA0002100 |

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **6502699356** | Our A/c No. : **1154135000017684** |
| Bank Name : **INDIAN BANK** | Bank Name : **KVB BANK** |
| Bank Branch : Asiad Colony | Bank Branch : Anna Nagar |
| IFSC : IDIB000A098 | IFSC : KVBL0001154 |

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **13240200032412** | Our A/c No. : **50200031530945** |
| Bank Name : **FEDERAL BANK** | Bank Name : **HDFC BANK** |
| Bank Branch : Anna Nagar | Bank Branch : Cenotaph Road, Teynampet |
| IFSC : FDRL0001324 | IFSC : HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

G Pay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
**Phone :** 044-4862 9977, 044-4862 7755.
**Mobile :** 96001 75757 / 81242 01000 / 81243 01000.
**Email :** orders@surabooks.com Website : www.surabooks.com

## இயல் 1 - மொழி - தமிழ்த்தேன்

# இன்பத்தமிழ் (கவிதைப்பேழை)

- பாரதிதாசன்

### மன வரைபடம்

**இன்பத்தமிழ்**

| | |
|---|---|
| **பாடலாசிரியர்** | – பாரதிதாசன் |
| **பாடல் இடம்பெற்ற நூல்** | – பாரதிதாசன் கவிதைகள் |
| **தலைப்பு** | – தமிழ் |

| **பெயர்கள்** | | **எங்களுக்கு** |
|---|---|---|
| அமுது | – | உயிருக்கு இணையானது |
| நிலவு | – | சமூக வளர்ச்சிக்கு நீர் போன்றது |
| மணம் | – | வாழ்விற்காக உருவாக்கப்பட்ட ஊர் |
| பால் | – | புலவருக்கான வேல் போன்ற கருவி |
| வானம் | – | சோர்வை நீக்கி ஒளிரும் தேன் போன்றது |
| தோள் | – | கவிதைக்கு வைரம் போன்ற வாள் |

### ஆசிரியர் குறிப்பு



- பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம்.
- பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார்.
- தம் கவிதைகளில் **பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு** முதலான புரட்சிகரமான கருத்துகளைப் பாடுபொருளாகப் பாடியுள்ளார்.
- எனவே, இவர் '**புரட்சிக்கவி**' என்று போற்றப்படுகிறார். இவர் '**பாவேந்தர்**' என்றும் சிறப்பிக்கப்படுகிறார்.

### நூற்குறிப்பு

- இப்பாடல், '**பாரதிதாசன் கவிதைகள்**' என்ற நூலில் 'தமிழ்' என்னும் தலைப்பின்கீழ் இடம் பெற்றுள்ளது.

### சொல்லும் பொருளும்

- நிருமித்த – உருவாக்கிய
- விளைவு – வளர்ச்சி
- சமூகம் – மக்கள் குழு
- அசதி – சோர்வு

## வினாக்கள்

**குறுவினா**

1. **பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை ?**

அமுது, நிலவு, மணம் என்று பாரதிதாசன் தமிழுக்குப் பெயர்கள் சூட்டியுள்ளார்.

2. **நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள் ?**

நான் தமிழைச் சூரியனோடு ஒப்பிடுகிறேன். சூரியன் போன்று மிகப் பெரிய சக்தியுடையதாகவும் எக்காலத்தும் நிலைத்து வாழக்கூடியது தமிழ்.

**சிறுவினா**

1. **இன்பத்தமிழ் – பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.**

தமிழுக்கு மணமென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

2. **சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது ?**

- நீரின்றி வேளாண் தொழில் நிகழாது.
- நீர் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் உயிர் போன்றது.
- நீரினால் விளையும் விளைச்சலினால் மக்கள் பயன் பெறுவர்.

3. **வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது ?**

- வேல் கூர்மையான ஆயுதம் அதைப்போல தமிழ்மொழியிலுள்ள இலக்கியங்கள், பாடல்கள், கவிதைகள் கூர்மையான கருத்துகளைக் கொண்டு மக்களை நல்வழிப்படுத்துகிறது.
- ஆகவே தமிழ், வேலுடன் ஒப்பிடப்படுகிறது. அதேபோல் கத்தியின் முனையைவிட பேனாவின் முனை கூர்மையானது என்ற பழமொழியும் இதனையே விளக்கும்.

**கூடுதல் வினா**

1. **பாரதிதாசனார் புரட்சிக்கவி என்று போற்றப்படக் காரணம் யாது ?**

பாரதிதாசனார் தம் கவிதைகளில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு ஆகியவை குறித்த புரட்சிகரமான கருத்துகளைப் பாடியுள்ளமையால் புரட்சிக்கவி என்று போற்றப்படுகிறார்.

## செய்யுள் வரி வினா விடை

1. **தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!**

**வினாக்கள்**

1. **இப்பாடலின் தலைப்பு யாது ?**

அ) செந்தமிழ் ஆ) பைந்தமிழ்
இ) இன்பத்தமிழ் ஈ) முத்தமிழ்

**விடை இ) இன்பத்தமிழ்**

www.surabooks.com



**2. இப்பாடலை இயற்றியவர் யார் ?**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) நாமக்கல் கவிஞர் ஈ) கவிமணி தேசிக விநாயகனார்

**விடை ஆ) பாரதிதாசன்**

**3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..............**

அ) நிலையன்று ஆ) நிலவென்று

இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று **விடை ஆ) நிலவென்று**

**4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ............**

அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள்

இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள் **விடை ஆ) தமிழெங்கள்**

**5. உயிருக்கு நேர் எது ?**

அ) இன்பத்தமிழ் ஆ) செந்தமிழ்

இ) பைந்தமிழ் ஈ) முத்தமிழ் **விடை அ) இன்பத்தமிழ்**

**2. தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! - இன்பத்**
**தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!**

**தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்**
**தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!**

**தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்**
**தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!**

**வினாக்கள்**

**1. பாரதிதாசன் எவ்வாறு போற்றப்படுகிறார் ?**

அ) புரட்சிக்கவி ஆ) தேசியக்கவி

இ) மகாகவி ஈ) விகடகவி **விடை அ) புரட்சிக்கவி**

**2. தமிழ் எதற்கு பால் போன்றது ?**

அ) முதுமைக்கு ஆ) இளமைக்கு

இ) வறுமைக்கு ஈ) மடமைக்கு **விடை ஆ) இளமைக்கு**

**3. தமிழ் உயர்விற்கு எதைப் போன்றது ?**

அ) காற்று ஆ) நெருப்பு இ) பூமி ஈ) வானம் **விடை ஈ) வானம்**

**4. தமிழ் ..................க்கு துணை கொடுக்கும் தோள் போன்றது.**

அ) வளமை ஆ) செழுமை இ) அறிவு ஈ) செறிவு **விடை இ) அறிவு**


**5. இன்பத்தமிழ் – பிரித்து எழுதுக.**

அ) இன்ப + தமிழ் ஆ) இன்பம் + தமிழ்

இ) இன்மை + தமிழ் ஈ) இன் + தமிழ் **விடை ஆ) இன்பம் + தமிழ்**

☆ ☆ ☆

# வளர்தமிழ் (உரைநடை உலகம்)




## மன வரைபடம்

### வளர்தமிழ்

**தமிழ்மொழியின் சிறப்புகள்**

1. இலக்கண, இலக்கிய வளம் பெற்றது.
2. ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.

**மூத்தமொழி**

என்று பிறந்தவள் என்று உணராத
இயல்பினளாம் எங்கள் தாய்! – பாரதியார்
பழமையான நூல் – தொல்காப்பியம்

**எளிய மொழி**

1. உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகளைக் கூட்டி ஒலித்தால் தமிழை படித்து விடலாம்.
2. வலஞ்சுழி எழுத்துகள் – அ, எ, ஔ, ண, ஞ
3. இடஞ்சுழி எழுத்துகள் – ட, ய, ழ

**சீர்மை மொழி**

1. உயர்திணை, அஃறிணை– இரு திணைகள்
2. உயர்திணை × தாழ்திணை என்று கூறாமல் அஃறிணை என்று கூறினர்.
3. அல் + திணை – உயர்வு அல்லாத திணை
4. பாகற்காய் – கசப்புக்காய் – இனிப்பு அல்லாத காய் பாகற்காய் (பாகு + அல் + காய்)

**சொல் வளம்**

பூவின் ஏழு நிலைகளுக்கும் தனிப்பெயர்கள். அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல்

**ஓர் எழுத்து சொல் – பல பொருள்**

மா – மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு.

**வளமை மொழி** – இலக்கிய, இலக்கண வளம் நிறைந்தது

1. தொல்காப்பியம், நன்னூல் – இலக்கண நூல்கள்
2. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு – சங்க இலக்கியங்கள்
3. திருக்குறள், நாலடியார் – அற நூல்கள்
4. சிலப்பதிகாரம், மணிமேகலை – காப்பியங்கள்

**வளர்மொழி**

இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் – முத்தமிழ்
செய்யுள், கவிதை, புதுக்கவிதை, துளிப்பா – கவிதை வடிவங்கள்
கட்டுரை, புதினம், சிறுகதை – உரை வடிவங்கள் (புதிதாக உருவாகி வருகின்றன.)
அறிவியல் தமிழ், கணினித்தமிழ் – வளர்ச்சி (தற்போதைய)

**புதுமைமொழி** – புதிய கலைச்சொற்கள் உருவாக்கம். **எ.கா.** இணையம், முகநூல், புலனம், குரல் தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை. செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி – பயன்பாட்டு மொழி அறிவியல் தொழில் நுட்பம் நோக்கில் **வரிவடிவ எழுத்துகள் பயன்பாடு.**

எண்களின் அடிப்படையில் வடிவமைப்பு தொல்காப்பியம், நன்னூல் – கணினி மொழிக்கு ஏற்ப வடிவம் கணினியில் பயன்பாடு பெற்றுள்ளன.

www.surabooks.com

## வினாக்கள்

**குறுவினா**

**1. தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது ?**

தொல்காப்பியம் தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் ஆகும். அப்படியென்றால் அதற்கும் முன்னதாகவே தமிழில் இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டும். இதனைக் கொண்டு தமிழ் மிகவும் தொன்மையான மொழி என்பதை உணரலாம்.

**2. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி, மணிமேகலை ஆகியவை தமிழின் சிறந்த காப்பியங்களாகும்.

**சிறுவினா**

**1. அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது ?**

**அஃறிணை**

- உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என அமைய வேண்டும்.
- ஆனால் நம் முன்னோர் தாழ்திணை என்று கூறாமல் உயர்வு அல்லாத திணை (அல் + திணை) அஃறிணை என்று பெயரிட்டனர்.

**பாகற்காய்**

- பாகற்காய் கசப்புச் சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல் இனிப்பு அல்லாத காய் (பாகு + அல் + காய்) பாகற்காய் என வழங்கினர்.

**2. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.**

- ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை ஆகியவை ஒருங்கே அமைந்த இலக்கியங்கள் பலவற்றைக் கொண்டது தமிழ்மொழி.
- பன்மொழி கற்ற கவிஞராகிய பாரதியார்,

  யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்<br>
  இனிதாவது எங்கும் காணோம்.

  என்று தமிழ்மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார்.

**3. தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.**

- உலக மொழிகள் பலவற்றுள் இலக்கண, இலக்கிய வளம் பெற்றுத் திகழும் மொழிகள் மிகச் சிலவே.
- அவற்றுள் செம்மைமிக்க மொழி என ஏற்றுக் கொள்ளப்பட்டவை சில மொழிகளே. தமிழ்மொழி அத்தகு சிறப்பு மிக்க செம்மொழியாகும்.
- தமிழ் இலக்கியங்கள் ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.
- எழுத்துகளின் ஒலிப்பு முறை மிக எளிமையானது.
- தமிழ்மொழி பேசவும், படிக்கவும், எழுதவும் உகந்த மொழி.
- முத்தமிழான இயல், இசை, நாடகம் கொண்ட மொழியாகும்.

4. **தமிழ் மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது ?**

**தமிழ் மொழி படிக்கவும் எழுதவும் எளியமொழி :**

- தமிழ் எழுத்துகள் வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், குவித்தல் ஆகிய மூன்று எளிய இயக்கங்களால் உயிர் ஒலிகள் பன்னிரண்டையும் எளிமையாக ஒலிக்க இயலும்.
- நாக்கு, உதடு, பல், அண்ணம் ஆகிய பேச்சுறுப்புகளின் உதவியால் காற்றை அடைத்தும் வெளியேற்றியும் மெய்யொலிகளை ஒலிக்க இயலும். உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் ஒலிகள்.
- உயிர், மெய் ஆகியவற்றின் அடிப்படை ஒலிப்பு முறைகளை அறிந்தால் 216 உயிர்மெய் எழுத்துகளையும் எளிதாகக் கற்கலாம். எழுத்துகளைக் கூட்டி ஒலித்தால் தமிழ் படித்தல் இயல்பாக நிகழும்.
- தமிழ்மொழியை எழுதும் முறையும் மிக எளிமையானது. இடப்புறமிருந்து வலப்புறமாகச் சுழித்து எழுதுவது குழந்தைகளின் இயல்பு. இதற்கேற்ப, தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன. இதன் மூலம் தமிழ்மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பதை அறியலாம்.

5. **தமிழ் மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா ? காரணம் தருக.**

- தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கிய வடிவங்கள் புதிது புதிதாக உருவாகி வருகின்றன.
- துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள் போன்றன தமிழ்க் கவிதை வடிவங்கள். கட்டுரை, புதினம், சிறுகதை போன்றன உரைநடை வடிவங்கள்.
- தற்போது அறிவியல் தமிழ், கணினித்தமிழ் என்று மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது. எனவே தமிழ்மொழி வளர்மொழி என்பதை உணர்கிறேன்.

**கூடுதல் வினாக்கள்**

1. **முத்தமிழ் என்பதை விளக்குக.**

- தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயர் உண்டு.
- இயல்தமிழ் எண்ணத்தை வெளிப்படுத்தும்.
- இசைத்தமிழ் உள்ளத்தை மகிழ்விக்கும்.
- நாடகத்தமிழ் உணர்வில் கலந்து வாழ்வின் நிறை குறைகளைச் சுட்டிக்காட்டும்.

2. **தமிழ் புதுமையான மொழி – விளக்குக.**

- இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன.
- இணையம், முகநூல், புலனம், குரல்தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை முதலிய சொற்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

3. **தமிழ்ச்சொற்கள் எவ்வாறு அமைந்துள்ளன ?**

- தமிழ்மொழியை எழுதும் முறை மிக எளிது.
- இதற்கேற்ப, தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.

**4. தமிழ் மொழி வளமை மொழி விளக்குக.**

- தொல்காப்பியம், நன்னூல் உள்ளிட்ட இலக்கண நூல்கள் மிகுந்தது தமிழ்நாடு.
- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய சங்க இலக்கியங்களைக் கொண்டது.
- திருக்குறள், நாலடியார் முதலிய அறநூல்கள் பலவும் நிறைந்தது.
- சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களைக் கொண்டது.
- ஒரு பொருளின் பல நிலைகளுக்கும் வெவ்வேறு பெயர் சூட்டுவது தமிழ்மொழியின் சிறப்பாகும்.
- **சான்று:** பூவின் ஏழுநிலைகளுக்கும் தோன்றுவது முதல் உதிர்வது வரை தனித்தனிப் பெயர்கள் தமிழில் உண்டு. ஒரு சொல் பல பொருளைக் குறித்து வருவதும் உண்டு.
- **சான்று :** 'மா' – என்னும் ஒரு சொல் மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு போன்ற பல பொருள்களைத் தருகிறது. இவ்வாறு இலக்கிய, இலக்கண வளம், சொல்வளம் நிறைந்தது தமிழ்மொழி.

☆ ☆ ☆

# ஒளி பிறந்தது (விரிவானம்)

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| அறிவியல் ஆர்வம் |
| திருக்குறள் |
| மகிழ்ச்சியான நிகழ்ச்சி |
| எதிர்கால இந்தியாவின் சிறப்புகள் |
| முடிவுரை |

**முன்னுரை**

மறைந்த மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல்கலாம் அவர்கள் குழந்தைகளிடமும் மாணவர்களிடமும் மிகுந்த அன்பு காட்டியவர். அவர் மாணவர்களிடம் உரையாடுவதையே பெரிதும் விரும்புவார்.

**அறிவியல் ஆர்வம்**

கலாம் அவர்கள் சிறுவனாக இருந்தபோது அவரது அறிவியல் ஆசிரியர் பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்று விளக்கிக் கூறினார். அன்று முதல் வானில் பறக்க வேண்டும் என்பது அவரது வாழ்க்கையின் குறிக்கோளாக மாறிவிட்டது.

**திருக்குறள்**

திருக்குறள் கலாம் அவர்களுக்கு பிடித்த நூல்.

அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

www.surabooks.com



என்னும் குறள் வாழ்விற்கு வலுசேர்த்ததாக கலாம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அதேபோல் லிலியன் வாட்சன் எழுதிய, விளக்குகள் பல தந்த ஒளி என்னும் நூலையும் தனக்கு மிகவும் பிடிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூலைப் படித்தபோது அறிவு, தன்னம்பிக்கை, மகிழ்ச்சி ஆகிய மூன்றையும் பெற்றதாகக் கூறுகிறார்.

**மகிழ்ச்சியான நிகழ்ச்சி**

போலியோவினால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று கிலோ எடையுள்ள செயற்கைக் கால்களைப் பொருத்திக்கொண்டு சிரமப்பட்டு நடப்பதைக் கண்டார். பாதுகாப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் கார்பன் இழையைக் கொண்டு முந்நூறு கிராம் எடையில் செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டன. அதனை அவர்கள் அணிந்து மகிழ்ந்த நிகழ்ச்சிதான் எனக்குப் பெருமகிழ்வை அளித்தது என்று கலாம் அவர்கள் குறிப்பிடுகிறார்.

**எதிர்கால இந்தியாவின் சிறப்புகள்**

ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நாளந்தா பல்கலைக்கழகத்தில் இருந்ததைப் போல வலுவான கல்வி முறை இருக்கும். அனைத்து இயற்கை வளங்களும் தீர்ந்து போயிருக்கும். ஆயினும் நாம் தயாரித்து அனுப்பிய செயற்கைக்கோள்கள் சூரிய சக்தியைப் பெற்றுத்தரும். செவ்வாய்க்கோளில் மனித இனம் குடியேறி இருக்கும்.

**முடிவுரை**

நாம் எந்தத் துறையைத் தேர்ந்தெடுத்துக் கற்றாலும், அதில் உயர்ந்த குறிக்கோளை மனதில் கொள்ள வேண்டும். அக்குறிக்கோளுக்கான அறிவையும் அனுபவத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். கடின உழைப்பில் வெற்றியடைய வேண்டும் என்று அப்துல்கலாம் கூறியுள்ளார்.

☆ ☆ ☆

www.surabooks.com

www.surabooks.com



# தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்(கற்கண்டு)

## அறிந்து கொள்க

- தமிழ் மொழியின் இலக்கண வகைகள் ஐந்து. எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம்.

**எழுத்து**

- முதல் எழுத்து, உயிர், மெய் என இருவகைப்படும். உயிர் எழுத்துகள் உயிரைப் போல தனித்து இயங்கும் தன்மை உடையன. அவை: அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன. உயிர் எழுத்துக்களில் குறில், நெடில் என இரு பிரிவுகள் உண்டு. கால அளவைக் கணக்கிட்டு இரண்டாகப் பிரித்தனர் இலக்கணப் புலவர்கள். குறிலும் என்றாலும் குற்றெழுத்து என்றாலும் ஒன்றே. நெடில் என்றாலும் நெட்டெழுத்து என்றாலும் ஒன்றே.

**குறில்**

- குறுகிய ஓசையை உடைய எழுத்து குறில். குறில் ஒரு மாத்திரை அளவைப் பெறும். அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து எழுத்துகளும், குற்றெழுத்துகளாகும்.

**நெடில்**

- நீண்ட ஓசையை உடைய எழுத்து நெடில். நீண்ட ஓசையுடைய நெடில் இரண்டு மாத்திரை அளவை பெறும். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழு எழுத்துகளும் நெட்டெழுத்துகளாகும்.

**மாத்திரை**

- மாத்திரை என்பது இங்குக் கால அளவைக் குறிக்கிறது. ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.

  குறில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – 1 மாத்திரை
  நெடில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – 2 மாத்திரை

**மெய்யெழுத்துகள் :**

- மெய் என்பது உடம்பு எனப் பொருள்படும். மெய் எழுத்துகளை ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள் ஆகும். மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு – அரை மாத்திரை.

| | |
|---|---|
| **வல்லினம்** | க், ச், ட், த், ப், ற் |
| **மெல்லினம்** | ங், ஞ், ண், ந், ம், ன் |
| **இடையினம்** | ய், ர், ல், வ், ழ், ள் |

**உயிர்மெய் எழுத்துகள் :**

- உயிர் எழுத்துகளும் மெய் எழுத்துகளும் சேர்வதினால் உண்டாகின்ற இந்த எழுத்துகளை உயிர்மெய் எழுத்துகள் என்று கூறுவர்.



www.surabooks.com

- உயிர் எழுத்துகளின் கால அளவே உயிர்மெய் எழுத்துகளின் கால அளவு என்பதனால் உயிர்மெய் எழுத்து குறிலாக இருப்பின் ஒரு மாத்திரை கால அளவே உச்சரிக்கும் காலமாகும்.
- உயிர்மெய் எழுத்து நெடிலாக இருப்பின் இரண்டு மாத்திரை கால அளவே உச்சரிக்கும் காலம் என்றும் வழங்குவர். உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை இரு நூற்றுப்பதினாறு ஆகும்.
- உயிர்மெய் எழுத்துகளுக்கு மெய் முதலும் உயிர் இறுதியும் ஆகும்.

**ஆய்த எழுத்து:**

- ஃ என்னும் வடிவம் உள்ள இந்த எழுத்தை ஆய்த எழுத்து அல்லது தனிநிலை எழுத்து என்பர்.
- ஆய்த எழுத்து உயிரோடும் மெய்யோடும் கூடாது தனியே நிற்பதால் தனிநிலை என்று வழங்கப்பட்டது.
- ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் காலஅளவு – அரை மாத்திரை

## நினைவில் கொள்க

**மாத்திரை**

இயல்பாக கண் இமைக்கும் நேரமும், விரல் நொடிக்கும் நேரமுமாகும். மாத்திரை என்பதன் பொருள் அளவு

| | | | |
|---|---|---|---|
| உயிரளபெடை | 3 மாத்திரை | மெய் (உடல்) | 1/2 மாத்திரை |
| நெடில் | 2 மாத்திரை | குற்றியலிகரம் | 1/2 மாத்திரை |
| குறில் | 1 மாத்திரை | குற்றியலுகரம் | 1/2 மாத்திரை |
| ஐகாரக்குறுக்கம் | 1 மாத்திரை | ஆய்தம் | 1/2 மாத்திரை |
| ஔகாரக்குறுக்கம் | 1 1/2 மாத்திரை | மகரக்குறுக்கம் | 1/4 மாத்திரை |
| ஒற்றளபெடை | 1 மாத்திரை | ஆய்தக்குறுக்கம் | 1/4 மாத்திரை |

**இலக்கண வினா விடைகள் :**

1. **தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும் ?**
அ) ஐந்து ஆ) ஆறு இ) ஏழு ஈ) எட்டு **விடை: அ) ஐந்து**

2. **இயல்பாகக் காற்று வெளிப்படும்போது ..................... பிறக்கின்றன.**
அ) மெய் எழுத்துகள் ஆ) உயிர் எழுத்துகள்
இ) உயிர்மெய் எழுத்துகள் ஈ) ஆய்த எழுத்து **விடை: ஆ) உயிர் எழுத்துகள்**

3. **உயிர் எழுத்துகள் எத்தனை ?**
அ) 10 ஆ) 12 இ) 18 ஈ) 30 **விடை: ஆ) 12**

4. **உயிரெழுத்துகளில் எத்தனை குறில் எழுத்துகள் உள்ளன ?**
அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு **விடை: ஆ) ஐந்து**

5. **உயிர் எழுத்துகளில் எத்தனை நெடில் எழுத்துகள் உள்ளன ?**
அ) ஐந்து ஆ) ஆறு இ) ஏழு ஈ) எட்டு **விடை: இ) ஏழு**

6. **ஒருமுறை கண் இமைக்கவோ, ஒருமுறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவு ..................... எனப்படும்.**
அ) மாத்திரை ஆ) எதிர்காலம்
இ) நிமிடம் ஈ) இவற்றில் எதுவுமில்லை **விடை: அ) மாத்திரை**

www.surabooks.com

7. **குறில் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு ......................**
அ) மாத்திரை ஆ) 1 மாத்திரை இ) 1 மாத்திரை ஈ) 2 மாத்திரை **விடை: ஆ) 1 மாத்திரை**

8. **மெய் எழுத்துகள் மொத்தம் எத்தனை ?**
அ) 12 ஆ) 16 இ) 18 ஈ) 20 **விடை: இ) 18**

9. **நெடில் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு ......................**
அ) 1 மாத்திரை ஆ) 2 மாத்திரை
இ) 3 மாத்திரை ஈ) 4 மாத்திரை **விடை: ஆ) 2 மாத்திரை**

10. **மெய் என்பது ...................... எனப் பொருள்படும்.**
அ) உயிர் ஆ) உடம்பு இ) இயக்கம் ஈ) பொருள் **விடை: ஆ) உடம்பு**

11. **வல்லின எழுத்துகள் எத்தனை ?**
அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு **விடை: இ) ஆறு**

12. **ங், ஞ், ண், ந், ம், ன் ஆகியன ......................**
அ) வல்லினம் ஆ) மெல்லினம்
இ) இடையினம் ஈ) இவற்றில் எதுவுமில்லை **விடை: ஆ) மெல்லினம்**

13. **மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு ......................**
அ) 2 மாத்திரை ஆ) 1 மாத்திரை
இ) 1½ மாத்திரை ஈ) ½ மாத்திரை **விடை: ஈ) ½ மாத்திரை**

14. **ய், ர், ல், வ், ழ், ள் ஆகியன ......................**
அ) வல்லினம் ஆ) மெல்லினம்
இ) இடையினம் ஈ) இவற்றில் எதுவுமில்லை **விடை: இ) இடையினம்**

15. **மெய் எழுத்துகள் பதினெட்டுடன் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றுபவை**
அ) உயிர் எழுத்துகள் ஆ) மெய் எழுத்துகள்
இ) உயிர்மெய் எழுத்துகள் ஈ) இவற்றில் எதுவுமில்லை
**விடை: இ) உயிர்மெய் எழுத்துகள்**

16. **ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவு ......................**
அ) அரை மாத்திரை ஆ) ஒரு மாத்திரை
இ) ஒன்றரை மாத்திரை ஈ) இரண்டு மாத்திரை **விடை: அ) அரை மாத்திரை**

17. **தமிழ் – இச்சொல்லுக்கான மாத்திரை அளவைக் கண்டறிக.**
அ) இரண்டரை மாத்திரை ஆ) ஒன்றரை மாத்திரை
இ) இரண்டு மாத்திரை ஈ) ஒரு மாத்திரை **விடை: அ) இரண்டரை மாத்திரை**

18. **தமிழ்மொழியில் தனிநிலை என்பது எது ?**
அ) உயிர் எழுத்துகள் ஆ) மெய் எழுத்துகள்
இ) உயிர்மெய் எழுத்துகள் ஈ) ஆய்த எழுத்து **விடை: ஈ) ஆய்த எழுத்து**

19. **யானை – மாத்திரையைக் கண்டறிக.**
அ) இரண்டு மாத்திரை ஆ) மூன்று மாத்திரை
இ) நான்கு மாத்திரை ஈ) ஐந்து மாத்திரை **விடை: இ) நான்கு மாத்திரை**

www.surabooks.com

**20. கணிப்பொறி – மாத்திரையைக் கண்டறிக.**

அ) 1 + 1 + ½ + 1 + 1 = 4½ ஆ) ½ + 1 + 1 + 1 + 1 = 4½

இ) 1 + 1 + 1 + 1 + ½ = 4½ ஈ) 1 + 1 + 1 + ½ + 1 = 4½

**விடை: அ) 1 + 1 + ½ + 1 + 1 = 4½**

**சான்று தருக.**

**1. வல்லின மெய்யெழுத்துகள்**

அ) ப், ற் ஆ) ழ, ள் இ) ர், ல் ஈ) ந், ம் **விடை: அ) ப், ற்**

**2. மெல்லின மெய்யெழுத்துகள்**

அ) ந், ன் ஆ) ய், ர் இ) ச், ட் ஈ) ழ், ள் **விடை: அ) ந், ன்**

**3. உயிர்க்குறில்**

அ) அ, ஆ, இ, எ, ஒ ஆ) அ, இ, உ, எ, ஓ

இ) அ, இ, உ, எ, ஒ ஈ) அ, இ, உ, ஏ, ஓ **விடை: இ) அ, இ, உ, எ, ஒ**

**நிரப்புக.**

**1. உயிர் எழுத்துகள் மொத்தம்**

அ) ஏழு ஆ) ஐந்து இ) பன்னிரண்டு ஈ) பதினெட்டு **விடை: இ) பன்னிரண்டு**

**2. குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு ..............**

அ) 2 மாத்திரை ஆ) ½ மாத்திரை

இ) 1 மாத்திரை ஈ) எதுவுமில்லை **விடை: இ) 1 மாத்திரை**

**3. வன்மையாக ஒலிப்பவை ..................**

அ) இடையினம் ஆ) மெல்லினம்

இ) வல்லினம் ஈ) நெடில் எழுத்து **விடை: இ) வல்லினம்**

**4. வன்மையுமின்றி மென்மையுமின்றி இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிப்பவை ..........**

அ) நெடில் ஆ) ஆய்தம் இ) குறில் ஈ) இடையினம் **விடை: ஈ) இடையினம்**

**கூறியவாறு செய்க.**

**1. தமிழ் இலக்கணம் (வகை எண்ணிக்கை எழுதுக)**

அ) ஐந்து ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு **விடை: அ) ஐந்து**

**2. இரண்டு மாத்திரை ஒலிக்கும் எழுத்து (ஒரெழுத்து சொல்)**

அ) தா ஆ) தீ இ) வூ ஈ) எதுவுமில்லை **விடை: ஆ) தீ**

**3. கபிலர் (சொல்லுக்கான மாத்திரை அளவை எழுதுக)**

அ) 3 ஆ) 4 இ) 2 ½ ஈ) 3½ **விடை: ஆ) 4**

**4. உயிர் மெய் எழுத்துகள் (எண்ணிக்கையை கூறுக)**

அ) 30 ஆ) 216 இ) 247 ஈ) 246 **விடை: ஆ) 216**

☆ ☆ ☆

www.surabooks.com

## இயல் 2 - இயற்கை - இயற்கை இன்பம்

# ஏதிலிக்குருவிகள் (கவிதைப்பேழை)

- அழகிய பெரியவன்

### மன வரைபடம்

**ஏதிலிக்குருவிகள்**

| | |
|---|---|
| **பாடலாசிரியர்** | – அழகிய பெரியவன் |
| **தலைப்பு** | – ஏதிலிக்குருவிகள் |



இப்போது குருவிகளையும் குருவிக்கூடுகளையும் பார்க்க இயலவில்லை.

முன்பெல்லாம் அடைமழைக் காலத்தில் நீர் புரண்டோடும். ஆற்றின் கரைகளில் உயர்ந்த மரங்கள் இருக்கும்.

பறவைகளின் குரல்கள் கேட்டுக் கொண்டே இருக்கும். தூக்கணாங்குருவிகளின் புல்லினால் ஆகிய வீடுகளாகிய கூடுகள் காற்றில் ஆடும்.

இப்போது மரங்கள் வெட்டப்பட்டு, வானம் பொய்த்து, நிலமும் வருந்தியது. பறவைகள் எல்லாம் அகதிகளாக எங்கோ சென்று விட்டன.

### ஆசிரியர் குறிப்பு

- அழகிய பெரியவனின் இயற்பெயர் அரவிந்தன்.
- **புதினம், சிறுகதை, கவிதை, கட்டுரை** போன்ற படைப்புத் தளங்களில் இயங்குபவர்.
- '**தகப்பன் கொடி**' புதினத்திற்காக 2003ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் விருது பெற்றவர்
- **குறடு, நெரிக்கட்டு, அரூப நஞ்சு, பெருகும் வேட்கை** உள்ளிட்ட நூல்களை எழுதியுள்ளார்.

### சொல்லும் பொருளும்

- ஏதிலி – அகதி
- மறுகியது – வருந்தியது

### வினாக்கள்

**குறுவினா**

**1. முன்பெல்லாம் மழைக்காலம் எவ்வாறு இருக்கும் ?**

முன்பெல்லாம் அடைமழைக்காலத்தில் ஊரில் ஓடும் ஆற்றில் நீர் புரண்டோடும்.

**2. தூக்கணாங்குருவியின் கூடுகளைக் கவிஞர் ஏன் புல் வீடுகள் என்று குறிப்பிடுகிறார்.**

தூக்கணாங்குருவிகளின் கூடுகள் புல்லினால் கட்டப்பட்டது. ஆகையால் அவற்றைப் புல் வீடுகள் என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



**சிறுவினா**

1. **குருவிகள் ஏதிலிகளாக ஆனதற்குக் காரணம் என்ன ?**
**குருவிகள் ஏதிலிகளாக ஆனதற்குக் காரணம்**

- இப்போது குருவிகளையும் குருவிக்கூடுகளையும் பார்க்க இயலவில்லை. ஊரில் ஓடும் ஆற்றில் முன்பெல்லாம் அடைமழைக் காலத்தில் நீர் புரண்டோடும், ஆற்றின் கரைகளில் உயர்ந்த மரங்கள் இருக்கும். பறவைகளின் குரல்கள் கேட்டுக் கொண்டே இருக்கும்.
- செல்லும் வழியில் எல்லாம் தூக்கணாங்குருவிகளின் புல்லினால் ஆகிய வீடுகளாகிய கூடுகள் காற்றில் ஆடும். மூங்கில்களில் அமர்ந்திருக்கும் சிட்டுக்குருவிகள் ஓடும் நீரின் ஓசையோடு இணைந்து பாடும். மண்ணில் நீர் சுரந்து கொண்டே இருக்கும்.
- இப்போது மரங்கள் வெட்டப்பட்டு விட்டன. வானம் பொய்த்துவிட்டது. நிலமும் வருந்தியது.
- அதனால் பறவைகள் எல்லாம் ஏதிலிகளாக(அகதிகள்) எங்கோ சென்றுவிட்டன.

2. **பறவைகள் ஏதிலிகளாகப் போகாமல் இருப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள் ?**

- மரங்களை வெட்டக் கூடாது, அரசின் உதவியால் ஆங்காங்கு குளங்களை அமைத்து மழைநீரைத் தேக்க வேண்டும்.
- ஏற்கனவே உள்ள நீர்நிலைகளான கிணறு, குளம், ஏரி போன்றவற்றைத் தூர்வாரி ஆழப்படுத்த வேண்டும். இவற்றைச் செய்வதால் பூமி குளிர்ந்த நிலையில் இருக்கும். தாவரங்கள் தழைத்து வளரும். பறவைகளுக்கு உணவும் கிடைக்கும். அவை தங்குவதற்கான மரங்களும் இருக்கும்.
- வீட்டு மொட்டை மாடிகளில் பறவைகளுக்குத் தானியமும் தண்ணீரும் வைக்க வேண்டும். செல்பேசி கோபுரங்கள் பெருகியதால் பறவையினங்களின் அழிவு அதிகமாகிவிட்டது. செல்பேசி கோபுரங்களுக்குப் பதில் மாற்றுவழியைக் கண்டறிந்தால் பறவையினங்களை அழிவிலிருந்து காப்பாற்றலாம்.

## செய்யுள் வரி வினா விடை

**குருவிகளையும்
கூடுகளையும்
பார்க்கக் கூடவில்லை**

**முன்பென்றால் ஊரில்
அடைமழைக்காலம்
ஆற்றில் நீர் புரளும்**

**கரையெல்லாம் நெடுமரங்கள்
கரைகின்ற பறவைக் குரல்கள்
போகும் வழியெல்லாம்
தூக்கணாங்குருவிக் கூடுகள்
காற்றிலாடும் புல் வீடுகள்
மூங்கில் கிளையமர்ந்து
சுழித்தோடும் நீருடன்
பாடிக்கொண்டிருக்கும் சிட்டுகள்**

**வினாக்கள்:**

**1. இப்பாடலின் தலைப்பு யாது ?**

அ) இன்பத்தமிழ் ஆ) முத்தமிழ்
இ) ஏதிலிக்குருவிகள் ஈ) இவற்றில் எதுவும் இல்லை

விடை **இ) ஏதிலிக்குருவிகள்**

**2. இப்பாடலை இயற்றிவர் யார் ?**

அ) அழகிய பெரியவன் ஆ) பாரதியார்
இ) பாரதிதாசன் ஈ) நாமக்கல் கவிஞர்

விடை **அ) அழகிய பெரியவன்**

**3. 'முன்பென்றால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) முன் + யென்றால் ஆ) முன்பு + அன்றால்
இ) முன்பு + என்றால் ஈ) முன்பு + பென்றால்

விடை **இ) முன்பு + என்றால்**

**4. கூடு கட்டுவதற்கு மரம் கிடைக்காத பறவைகள் .................... வேறிடம் சென்றன.**

அ) பதலிகளாக ஆ) ஏதிலிகளாக
இ) விருந்தாளிகளாக ஈ) பயணிகளாக

விடை **ஆ) ஏதிலிகளாக**

**5. 'தகப்பன் கொடி' புதினத்திற்காக அழகிய பெரியவன் எந்த ஆண்டு தமிழ்நாடு அரசின் விருதை பெற்றார் ?**

அ) 2000 ஆ) 2002 இ) 2003 ஈ) 2005

விடை **இ) 2003**

☆ ☆ ☆

# திருக்குறள் (வாழ்வியல்)

- திருவள்ளுவர்



## ஆசிரியர் குறிப்பு

- திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர்.
- எக்காலத்துக்கும் பொருந்தும் வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கூறியுள்ளார்.
- வான்புகழ் வள்ளுவர், தெய்வப்புலவர், பொய்யில் புலவர் முதலிய பல சிறப்புப் பெயர்கள் இவருக்கு உண்டு.

## நூற்குறிப்பு

- திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்றும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 குறட்பாக்களைக் கொண்டுள்ளது.
- "திருக்குறளில் இல்லாததும் இல்லை, சொல்லாததும் இல்லை" என்னும் வகையில் சிறந்து விளங்குகிறது.
- திருக்குறளுக்கு உலகப் பொதுமறை, வாயுறை வாழ்த்து முதலிய பல சிறப்புப் பெயர்கள் உண்டு.
- நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

www.surabooks.com



## வினாக்கள்

**குறுவினா**

1. **உயிருள்ள உடல் எது ?**

    அன்பு இருப்பது தான் உயிருள்ள உடல்.

2. **எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது ?**

    அகரமே எழுத்துகளுக்குத் தொடக்கம். அதுபோல ஆதி பகவனே உலகுக்குத் தொடக்கம்.

3. **அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை ?**

    அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் எனக்கே என்பார்கள்.

    அன்பு உடையவர்கள் தம் உடம்பும் பிறர்க்கே என்பார்கள்.

**கூடுதல் வினாக்கள்**

1. **காயை உண்பதைப் போன்றது எது ?**

    இனிய சொல் இருக்கும்போது இன்னாச்சொல் பேசுவது கனி இருக்கும்போது காயை உண்பதைப் போன்றது.

2. **தாய் எப்போது மகிழ்ச்சி அடைவாள் ?**

    தன் பிள்ளையின் புகழைக் கேட்ட தாய் பெற்றெடுத்த போது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெருமகிழ்ச்சி அடைவாள்.

3. **மழை குறித்து திருவள்ளுவர் கூறுவது யாது ?**

    - மழை உரியகாலத்தில் பெய்யாது போனால், உலகத்து உயிர்களை எல்லாம் பசி துன்புறுத்தும்.
    - உரிய காலத்தில் பெய்யாது கெடுப்பதும் மழைதான். உரிய காலத்தில் பெய்து காப்பதும் மழைதான்.

4. **எலும்புத் தோல் போர்த்திய உடம்பு எது ?**

    அன்பு இருப்பது தான் உயிருள்ள உடல். அன்பு இல்லாதது வெறும் எலும்புத் தோல் போர்த்திய உடம்பாகும்.

5. **ஒருவருக்குச் சிறந்த அணிகலன்கள் எவை ?**

    பணிவும் இன்சொல்லுமே ஒருவருக்கு மிகச் சிறந்த அணிகலன்கள் ஆகும். மற்றவை அணிகலன்கள் ஆகாது என்று வள்ளுவர் கூறுகிறார்.

6. **செயற்கரிய செய்வார் பெரியர் ..................**
    **செயற்கரிய செய்கலா தார்.**
    **குறளில் பெரியர், சிறியர் என்று குறிப்பிடப்படுபவர்கள் யாவர் ?**

    - பெரியர் – முடியாத செயலையும் முடித்துக் காட்டுபவர்.
    - சிறியர் – முடியாது என்று கூறுபவர்கள் சிறியர்.

## குறட்பாக்களைச் சரியான சீர்களால் நிரப்புக

### கடவுள் வாழ்த்து

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
    பகவன் முதற்றே ................

    அ) பிறப்பு　　ஆ) இன்பம்　　இ) உலகு　　ஈ) ஆசை　　**விடை: இ) உலகு**

## வான் சிறப்பு

2. விண்இன்று பொய்ப்பின் ................ வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.
அ) விரிநீர் ஆ) விழிநீர் இ) தண்ணீர் ஈ) சுடுநீர் **விடை: அ) விரிநீர்**

3. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் ................
அ) வானம் ஆ) காற்று இ) நீர் ஈ) மழை **விடை: ஈ) மழை**

## நீத்தார் பெருமை

4. செயற்கரிய செய்வார் பெரியர் ................
செயற்கரிய செய்கலா தார்.
அ) சிறியர் ஆ) பெரியர் இ) மூத்தோர் ஈ) புலவர் **விடை: அ) சிறியர்**

## மக்கட்பேறு

5. தம்மின்தம் ................ அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.
அ) விலங்கு ஆ) குழந்தை இ) மக்கள் ஈ) சான்றோர் **விடை: இ) மக்கள்**

6. ................ பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.
அ) ஈன்ற ஆ) சான்ற இ) தோன்ற ஈ) என்ற **விடை: அ) ஈன்ற**

## அன்புடைமை

7. ................ எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.
அ) அன்புடையவர் ஆ) அன்பில்லாதவர்
இ) அன்பிலார் ஈ) பண்பிலார் **விடை: இ) அன்பிலார்**

8. அன்பின் ................ உயர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.
அ) வழியது ஆ) பெரியது இ) சிறியது ஈ) விழியது **விடை: அ) வழியது**

## இனியவை கூறல்

9. பணிவுடையன் இன்சொலன் ................ ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.
அ) ஈதல் ஆ) ஆதல் இ) தேடல் ஈ) விடல் **விடை: ஆ) ஆதல்**

10. ................ உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.
அ) கனிய ஆ) இனிய இ) பணிய ஈ) பனிய **விடை: ஆ) இனிய**

☆ ☆ ☆

# சிறகின் ஓசை (உரைநடை உலகம்)

## மன வரைபடம்

**பறவை இடம் பெயர்வு காரணம்**
உணவு, இருப்பிடம், தட்பவெப்ப நிலை மாற்றம், இனப்பெருக்கம்

**உடலில் ஏற்படும் மாற்றங்கள்**
தலையில் இறகு வளர்தல்
இறகுகளின் நிறம் மாறுதல்
கற்றையாக முடி வளர்தல்

உலகச் சிட்டுக் குருவிகள் நாள் மார்ச் – 20

**கண்டம் விட்டு கண்டம் பறத்தல்**
வலசை போதல்



**சிறகின் ஓசை**

**இலக்கிய செய்தி**
சத்திமுத்தப்புலவர் – 1500 ஆண்டுகள் முன்பு வாழ்ந்தவர் இவரது "நாராய், நாராய், செங்கால் நாராய்..." என்ற பாடலின் 'தென்திசைக் குமரி ஆடி வடதிசைக்கு ஏகுவீர் ஆயின்'


**இந்தியாவின் பறவை மனிதர்**
சலீம் அலி



**காப்பாற்ற நாம் செய்ய வேண்டியவை**
1. ஆல், அரசு மரங்கள், அவரை, புடலை கொடிகள் வளர்ப்பு.
2. செயற்கை உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் தவிர்ப்பு

**அழியும் இனம்**
1. சிட்டுக்குருவி பழுப்பு நிறப் பறவை,
2. கூடு கட்டி வாழும், உணவு – தானியங்கள், மலர் அரும்புகள், தேன்,
3. வாழ்நாள் – 10–13 ஆண்டுகள்.

**அழிவுக்கான காரணங்கள்**
1. விவசாயம் – பூச்சிக்கொல்லி மருந்துகள் உபயோகம், நவீன கட்டடங்கள்,
2. செயற்கை வேலிகள் அமைப்பு, வேலித் தாவரங்கள் குறைவு
3. உணவு, இருப்பிடம் போட்டி



**இந்தியாவின் பறவை மனிதர்**

இன்றைய பறவையியல் ஆய்வாளர்களுக்கு முன்னோடி டாக்டர் சலீம் அலி. தம் வாழ்நாள் முழுவதும் பறவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலும் அவற்றைப் படம் பிடிப்பதிலும் ஈடுபட்டார். அதனால், அவர் 'இந்தியாவின் பறவை மனிதர்' என்று அழைக்கப்படுகிறார். பறவைகள் குறித்துப் பல நூல்களை எழுதியுள்ளார். தம் வரலாற்று நூலுக்குச் 'சிட்டுக்குருவியின் வீழ்ச்சி' (The fall of sparrow ) என்று பெயரிட்டுள்ளார்.

## வினாக்கள்

### குறுவினா

**1. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன ?**

உணவு, இருப்பிடம், தட்பவெப்ப நிலை மாற்றம், இனப்பெருக்கம் இவற்றிற்காகவே பறவைகள் இடம் பெயர்கின்றன.

**2. வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை ?**

- தலையில் சிறகு வளர்தல்
- இறகுகளின் நிறம் மாறுதல்
- உடலில் கற்றையாக முடி வளர்தல்
- ஒருவகைப் பறவை வேறுவகைப் பறவையாக உருமாறித் தோன்றும் அளவிற்குக் கூடச் சில நேரங்களில் மாற்றங்கள் ஏற்படும்.

### சிறுவினா

**1. சிட்டுக் குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.**

- சிட்டுக்குருவி கூடுகட்டி வாழும் பறவையினத்தைச் சார்ந்தது.
- கூடுகட்டிய பின் மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை இடும். பதினான்கு நாள்கள் அடைகாக்கும். பதினைந்தாம் நாளில் குஞ்சுகள் வெளிவரும்.
- துருவப் பகுதிகள் தவிர மனிதன் வாழும் இடங்களில் எல்லாம் சிட்டுக்குருவிகளும் வாழ்கின்றன.
- இமயமலைத் தொடரில் 4000 மீட்டர் உயரத்தில் கூட இவை வாழ்கின்றன.

**2. வலசைப் பறவைகளின் பயணம் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை ?**

- பறவைகள் கண்டம் விட்டுக் கண்டம் பறக்கின்றன.
- அவை பெருங்கடல்களையும் மலைகளையும் கடந்து போகின்றன.
- குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்கின்றன.
- பறவைகள் தங்களுக்கென ஒரு வழித்தடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பாதையிலேயே பறக்கின்றன.
- சில பறவை இனங்கள் அதே பாதையில் தாய்நிலங்களுக்குத் திரும்புகின்றன.
- சில பறவை இனங்கள் போவதற்கும் வருவதற்கும் இருவேறு பாதைகளைப் பயன் படுத்துகின்றன.

**3. பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்பட நாம் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக.**

- ஆல், அரசு போன்ற மரங்களையும் அவரை, புடலை போன்ற கொடிகளையும் வளர்க்க வேண்டும்.
- நமது மண்ணுக்கேற்ற பிறவகை உள்ளூர்த் தாவரங்களையும் வளர்க்க வேண்டும்.
- தோட்டங்களிலும் வயல்வெளிகளிலும் செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றைத் தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

www.surabooks.com



**கூடுதல் வினாக்கள்**

1. **சிட்டுக்குருவியின் அழிவுக்கான காரணங்கள் யாவை ?**
   - மனிதர்கள் விவசாயத்திற்குப் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதால் குருவிக் குஞ்சுகளுக்கு உணவான புழு, பூச்சிகள் கிடைப்பதில்லை.
   - நவீன கட்டடங்கள் குருவிகள் கூடு கட்டி வாழ்வதற்கு ஏற்றவையாக இல்லை.
   - சிட்டுக்குருவிகள் ஓய்வெடுக்கும் புதர்ச்செடிகளும் இல்லை.

2. **இந்தியாவின் பறவை மனிதர் யார் ?**
   - இன்றைய பறவையியல் ஆய்வாளர்களுக்கு முன்னோடி டாக்டர் சலீம் அலி.
   - தம் வாழ்நாள் முழுவதும் பறவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலும், அவற்றைப் படம் பிடிப்பதிலும் ஈடுபட்டார்.
   - அதனால், அவர் இந்தியாவின் பறவை மனிதர் என்று அழைக்கப்படுகிறார்.

3. **சிட்டுக்குருவிகளின் உணவுகள் குறித்து எழுதுக.**
   - தானியங்கள், புழு பூச்சிகள், மலர் அரும்புகள், இளந்தளிர்கள், தேன் போன்றவை சிட்டுக்குருவிகளின் உணவாகும்.
   - சிட்டுக்குருவியின் குஞ்சுகள் பெரும்பாலும் புழு, பூச்சிகளையே உட்கொள்ளும்.

4. **பறவை பற்றிய உண்மைகளை சலீம் அலி எவ்வாறு கூறுகிறார் ?**

   மனிதன் இல்லாத உலகில் பறவைகள் வாழ முடியும்!
   பறவைகள் இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது!

5. **சிட்டுக்குருவிகளிடம் பாரதியார் காட்டிய பரிவு யாது ?**

   காக்கை குருவி எங்கள் சாதி என்று பாடியவர் பாரதியார். சமைப்பதற்குத் தம் மனைவி வைத்திருந்த சிறிதளவு அரிசியையும் முற்றத்தில் இருந்த சிட்டுக்குருவிகளுக்கு மகிழ்வுடன் போட்டுவிட்டுப் பட்டினியாக இருந்தவர் பாரதியார்.

☆ ☆ ☆

# கிழவனும் கடலும் (விரிவானம்)

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| வயதான மீனவர் |
| அந்த நாள் |
| தலையும் எலும்பும் |
| விடாமுயற்சியும் வெற்றியும் |
| முடிவுரை |

**முன்னுரை**

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே நடக்கும் போராட்டமே இந்தக் கதை. இக்கதையின் நாயகன் சாண்டியாகோ. அவரது விடாமுயற்சி குறித்து இக்கதையில் காணலாம்.

**வயதான மீனவர்**

சாண்டியாகோ வயது முதிர்ந்த மீனவர். முன்பெல்லாம் கடலுக்குச் சென்றால் மீன் இல்லாமல், திரும்பமாட்டார். ஆனால், கடந்த எண்பத்து நான்கு நாள்களாக அவருக்கு ஒரு மீனும் கிடைக்கவில்லை. மனோலின் என்னும் சிறுவன் மீன் பிடிக்கக் கற்றுக் கொள்வதற்காக முதல் நாற்பது நாள்களும் அவருடன் கடலுக்கு வந்தான். அவரோடு கடலுக்குப் போனால் ஒரு மீனும் கிடைப்பதில்லை என்று அவனை அவனது பெற்றோர் வேறு படகிற்கு அனுப்பிவிட்டனர்.

**அந்த நாள்**

இன்று எண்பத்து ஐந்தாவது நாள் தனக்கு மீன்கள் கிடைக்கவே கிடைக்காது என்று எல்லோரும் சொல்கிறார்கள். அதை எப்படியாவது மாற்றிக் காட்ட வேண்டும் என எண்ணியபடி கடலில் தூண்டிலைப் போட்டுவிட்டுக் காத்துக் கொண்டிருந்தார். தூண்டிலில் சுறாமீனை மாட்டி வைத்திருந்தார். மீன் இல்லாமல் திரும்பப் போவதில்லை என்று முடிவுடன் இருந்தார். தூண்டில் கயிற்றை ஏதோ இழுப்பது போல் தெரிந்தது.

சாண்டியாகோவைக் கடலுக்குள் இழுத்துத் தள்ளிவிடுவது போல் இழுத்தது. இப்படியாக நாலுமணி நேரம் போராட்டத்திற்குப் பிறகு களைத்துப் போய் சற்று கண்ணயர்ந்து தூங்கிவிட்டார். மீன் மீண்டும் தூண்டிலை இழுத்தபோது சாண்டியாகோவின் உறக்கம் கலைந்தது. மீனைப் பிடிக்க முடியாமல் அதனை ஈட்டியில் குத்திக் கொன்று விடுகிறார். பிறகு பெரிய மீனாக இருந்ததால் படகுக்குள் போட இயலாமல் படகின் பக்கவாட்டில் இழுத்துக் கட்டிப் படகைக் கரையை நோக்கிச் செலுத்தினார்.

**தலையும் எலும்பும்**

அப்போது சுறாமீன் இவர் படகில் கட்டி வைத்த மீனைச் சாப்பிடுவதற்காகச் சூழ்ந்தன. அவற்றை ஈட்டியில் வீழ்த்தினார். ஒரு வழியாகக் கரை சேர்ந்தார். பிறகு படகோடு கட்டிய மீனைப் பார்த்தார். அது சுறாமீன்களால் உண்ணப்பட்டு அதன் தலையும் எலும்பும் தான் மிஞ்சியிருந்தன.